056

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5239/ESU3139 – கல்வியில் தற்கால செல்நெறிகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.01.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. "கல்வி என்பது சிறுவர்களுக்கான சலுகை அல்ல அது அவர்களின் உரிமை"

   விசேட கல்வித் தேவைகளையுடைய சிறவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்க கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஐந்து (05) விடயங்களைக் குறிப்பிடுக.

2. இயலாமைகள் உள்ளவர்களின் கல்வி உரிமைகளை உறுதிப்படுத்தும் குறைந்தது மூன்று (03) சர்வதேச சமவாயங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை (01) விளக்குக.

3. ஒருங்கிணைந்த கல்வியின் ஐந்து (05) குறிப்பிடத்தக்க முக்கியத்துவங்களை ஆராய்ந்து பட்டியலிடுக.

4. இலங்கையில் இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கான தற்போதைய கல்விச் சேவைகளின் ஐந்து (05) சவால்களை விளக்குக.

5. நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான இலக்குகள் :- 2015 – 2030 இன் இலக்கு – 04 ஐச் சுருக்கமாக விளக்குக.

6. இலங்கையில் இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கான முறைசாராக் கல்வியின் ஐந்து (05) நன்மைகளைக் குறிப்பிடுக.

7. விசேட கல்விக்கும் உள்ளடங்கற் கல்விக்கும் இடையிலான ஐந்து (05) முக்கிய வேறுபாடுகளைக் குறிப்பிடுக

8. நிகழ்நிலைக் (Online) கல்வி இயலாமைகள் உள்ள மாணவர்களின் கற்றலுக்கு உதவக்கூடிய ஐந்து (05) வழிகளைப் பட்டியலிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. கல்வி குறித்த செயற்பாட்டுவாதக் கண்ணோட்டத்தை (Functionalist Perspective) எடுத்துக்காட்டுக்களின் மூலம் சுருக்கமாக விவரிக்குக.

   **(05 புள்ளிகள்)**

   ii. இயலாமையுடைய பிள்ளைகள் தொடர்பான தனியாள் விருத்திக்கான கல்வி என்ற எண்ணக்கருவை விளக்குக.

   **(07 புள்ளிகள்)**

   iii. இலங்கையில் இயலாமைகளையுடைய நபர்கள் தங்கள் விருத்தியில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

   **(08 புள்ளிகள்)**

10. i. முறைசார் (Formal) கல்வி முறையின் பொருளைச் எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

   **(05 புள்ளிகள்)**



47

ii. முறையில் (Informal) கல்வி முறை இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதில் எவ்வாறு உதவ முடியும் என்பதை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கான முறைசார் கல்வி முறையின் நடைமுறைகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

11. i. இயலாமைகள் உள்ள மாணவர்களின் சூழ்நிலையினை அடிப்படையாகக் கொண்டு “விசேட கல்வித் தேவைகள்” ஐ வரையறை செய்க.

**(05 புள்ளிகள்)**

ii. விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு உதவுவதனை நோக்கமாகக் கொண்ட உத்திகள் மற்றும் ஏற்பாடுகளின் வளர்ச்சியை ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் உள்ளடங்கற் கல்வியின் முன்னேற்றத்திற்கு விசேட கல்வி அலகு அமைப்பு எவ்வாறு பங்களிக்கிறது என்பதனை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12. i. உங்கள் சொந்த மொழிநடையில் “பூரண உள்ளடங்கல்” என்பதை வரையறுத்து, உங்கள் விளக்கத்தை உறுதிப்படுத்த ஒரு உதாரணத்தை முன்வைக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. இயலாமைகள் உள்ள பிள்ளைகளுக்கான பூரண உள்ளடங்கல் நடைமுறைகளின் நன்மைகளை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் உள்ளடங்கற் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகள் எவ்வகையான சவால்களை எதிர்கொள்கிறார்கள்?

**(08 புள்ளிகள்)**

13. i. அனைவருக்கும் கல்வி இலக்கை அடையும் வகையில் அரசாங்கங்கள் செயற்படக்கூடிய பரிமாணங்களைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

ii. மேலே குறிப்பிடப்பட்ட அனைவருக்கும் கல்வி இலக்குகளை அடைவதில் இலங்கை கல்வி முறை எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

**(07 புள்ளிகள்)**

iii. அனைவருக்கும் கல்வி இலக்குகளை இலங்கை அரசு எந்த அளவிற்கு அடைந்துள்ளது என்பதை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

14. i. “விசேட சூழ்நிலையில் வாழும் பிள்ளைகள்” இப்பதத்தினை விரிவாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. பொருளாதார நெருக்கடிகள் மற்றும் உலகலாவிய மோதல்கள் விசேட சூழ்நிலையில் வாழும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைப் பற்றி ஆராய்க. உங்கள் கருத்துக்களை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விளக்குக.

**(07 புள்ளிகள்)**

iii. இலங்கையில் விசேட சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகளின் விருத்திக்கு உதவுவதற்கு எவ்வகையான உத்திகளைச் செயற்படுத்தலாம்? உங்கள் விளக்கத்தை ஆதரிக்க உதாரணங்களை வழங்கவும்.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



50